DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.185/2025

PW - 9

| | | |
|---|---|---|
| Name | : | ஜீ.சிவபிரகாசம் (Lw - 9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 05.05.2026**

நான் எருமப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 15.03.2025ம் தேதி காலை 09.30 மணிக்கு எருமப்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற சித்ரா என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி சித்ராவை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எண்.40/2025, BNS சட்ட பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(** புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.6** ஆகவும்**,** முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.7** ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது**.)**

கடந்த 15.03.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று

சாட்சிகள் அரவிந்த், மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் சாட்சிகள் சித்ரா, வைரன், சிவசுப்ரமணி, சின்னசாமி, தர்மலிங்கம், அரவிந்த், மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் மதியம் 13.00 மணிக்கு எருமப்பட்டி அம்பேத்கர் நகர் மாரியம்மன்கோவில் முன்பு நின்று கொண்டிருந்த எதிரி மஞ்சுளாவை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தார். பின்பு வழக்கின் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்ரமணியன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் தொடர்பான தகவலானது காவல்நிலையத்திற்கு சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்துதான் கிடைத்தது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதம் எதையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமானது கலைச்செல்வன் என்பவரது வீட்டின் முன்பு அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று எருமப்பட்டியில் சந்தை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். நான் வாதியை விசாரித்தபோது நிலம் சம்மந்தமாக அவருக்கும் எதிரிக்கும் முன் விரோதம் இருந்து வந்ததாக கூறினார் என்றால் சரிதான். எதிரி வாதியை அடிக்கவில்லை என்றாலும், முன் விரோதம் காரணமாக வாதி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் பொய்யான வழக்கு பதிவு செய்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**